THE HINDU - EPAPER
Dated: 07.02.2025

# EVMs kept in strongrooms with three-tier security system, says Delhi CEO

**Paramilitary forces personnel are guarding the innermost perimeter of the strongrooms, while the State-armed police have been tasked with securing the outer perimeter.**

Updated - February 07, 2025 05:07 am IST

THE HINDU BUREAU




A polling official carrying EVMs and other election materials. | Photo Credit: FILE PHOTO

The EVMs and VVPAT machines used in the Delhi Assembly election have been kept in 70 strongrooms and are secured by a three-tier cordon, Delhi Chief Electoral Officer (CEO) R. Alice Vaz said on Thursday.

"These strongrooms, one for each Assembly constituency, are being safeguarded with stringent security measures as part of the Election Commission's protocols," read a statement by the CEO.

## Forces on guard

It added that paramilitary forces personnel are guarding the innermost perimeter of the strongrooms, while the State-armed police have been tasked with securing the outer perimeter.

"24x7 CCTV surveillance is in place, covering all sealed doors and corridors, and a double-lock system ensures additional security," the Delhi CEO said. It added, "The strongrooms are accessible only through a single entry/exit point to prevent unauthorised access."

## No entry for vehicles

Operational control rooms have been set up adjacent to the strongrooms and entry is prohibited for all vehicles, including those of VIPs and officials, the CEO also said.

In addition, Ms. Vaz stated that all election-related documents were found to be in order during the scrutiny, and added that the presence of observers, candidates and representatives ensured fairness in the electoral process.

She said that re-election would not be required on any of the 70 constituencies, as no complaints were received from any of the 699 candidates.

Published - February 07, 2025 12:42 am IST

# Delhi Assembly polls: Over 1,090 cases of violation of MCC registered

**A total of 35,020 people have been arrested or detained under various provisions of preventive action and other acts, according to a statement**

Updated - February 06, 2025 03:43 pm IST - New Delhi

PTI




Police personnel checks voter slips for the Delhi Assembly election, in New Delhi on Wednesday. | Photo Credit: ANI

More than 1,090 cases of alleged violations of the Model Code of Conduct (MCC) have been registered in Delhi, an official said on Thursday (February 6, 2025).

**Also Read | Delhi Assembly polls: Majority of exit polls predict BJP's return to power**

The cases were lodged between January 7, when the MCC came into force, and February 5.

A total of 35,020 people have been arrested or detained under various provisions of preventive action and other acts, according to a statement.

Delhi Police has recorded 1,098 cases of alleged MCC violations and confiscated 472 illegal firearms and 534 cartridges with 496 people arrested under the Arms Act, the statement said.

The police have also seized 1,14,699 litres of liquor and arrested 1,423 people, 206.712 kg of drugs worth over Rs 77.9 crore with more than 1,200 banned injections seized and arrested 179 people so far.

The law enforcement agencies have also seized Rs 11.70 crore in cash and 37.39 kg of silver, the statement added.

Published – February 06, 2025 03:08 pm IST

# Key issues for Delhi voters: inflation, jobs, affordable houses, safety of women

**Prices of food items and cooking gas weighed on the minds of many women voters while a young resident worried about the job market; many also cast their ballot in hope of getting *pucca* houses**

Updated - February 06, 2025 06:21 am IST - NEW DELHI

ASHNA BUTANI, ALISHA DUTTA




Voters showing their ink-marked finger after casting their vote at Sarvodaya Kanya Vidyalaya in Kalkaji on Wednesday. | Photo Credit: SHIV KUMAR PUSHPAKAR

Rising prices, unemployment, air pollution, and better infrastructure were on top of Delhi voters' minds when they stepped out to vote on Wednesday.

However, the issues varied across regions and social structures. While voters in affluent areas were concerned about air pollution and parties failing to raise it during the poll

campaign, the key issue was basic amenities for people in unauthorised colonies.

In south-east Delhi's Shaheen Bagh, 32-year-old Parveen Bibi, who works as a cook, told The Hindu that inflation is affecting many like her, and she voted for a party that could bring her relief. "With each passing day, food items are getting pricier. We have to hide from our teenage kids that there is a food shortage in the house because of the price rise," said Ms. Bibi.

Ajijun Nisha, a 60-year-old resident of Matia Mahal near Chandni Chowk, echoed similar sentiments. "Inflation is the biggest concern for women; cylinders and ration have become very expensive," she said.

But for many young voters, employment was in their minds while voting.

## Job opportunities

Aditi Singh, a 22-year-old resident of Kalkaji, said her master's degree was ending, and she was afraid of a job market crisis. "Having seen so many people taking up gig work despite having a good education, I'm scared to face the job market in the city," said Ms Singh.

Sunaina, an 18-year-old first-time voter in the New Delhi constituency and a BSc student, said she voted for access to scholarships and better education facilities. "Issues concerning students, such as scholarships and welfare schemes, are important for me as I don't want to be a burden on my family," she said.

## Crumbling infra

Another key issue on the minds of the voters was the city's infrastructure. For 40-year-old Anita, a sanitation worker who voted from the Chandni Chowk constituency, better housing and roads were of prime importance. "We live in a kutcha house, and when it rains, the roof leaks," said Ms. Anita.

Shiv Devi, a 70-year-old voter from New Ashok Nagar, said she voted for better water supply and improved drainage. "The water we get from the tap is so dirty that it smells, and we are forced to buy bottled water," she rued.

Many voters stepping out of their houses in the upscale localities complained about how air pollution was left out of the conversation ahead of the polls. Kamal Mitra, a 73-

year-old resident of Vasant Kunj, said it is a shame that air pollution in a city like Delhi was not a political issue during elections. “For old people like us, even after the pandemic, we are having to wear masks almost all year round. Why did the parties not consider it their priority?” he asked.

Similarly, voters expressed their dismay over the lack of conversation about women’s safety. Shabina Jahan, a 42-year-old voter from the Matia Mahal constituency, said, “My daughter is studying in Class 11. I am worried about what she will do after Class 12 as Delhi is unsafe, and women’s safety is what matters most to me.”

Having similar concerns, Pushpa Jethani, a 79-year-old voter from Vasant Kunj, said “It is depressing to see that all three major parties have put forward such few women as their candidates, despite so many women voters and rising concerns over women’s safety.”

Published – February 06, 2025 01:50 am IST


# Delhi Assembly elections: Homeless brave uncertainty to cast their vote

**While the government had promised free electricity and water, my landlord still charged us, even if the bill showed zero. What is the purpose of such schemes if they do not reach us?, says Nisha, a garbage collector**

Updated - February 05, 2025 04:53 pm IST - New Delhi



SOIBAM ROCKY SINGH



Kheru Nisha with her children inside a night shelter located near the Delhi Golf Club | Photo Credit: Soibam Rocky Singh

Delhi's homeless citizens stepped out from night shelters and roadside dwellings to vote in the Delhi Assembly elections on Wednesday (February 5, 2025).

**Delhi Assembly election 2025 LIVE updates**

Currently residing in a night shelter at Lodhi Colony, Ms. Kheru Nisha (30) said she went to vote early in the morning. Asked what influenced her decision, the mother of five said, "Everything is so expensive. Six months ago, we were living in a one-room rented apartment in the Nizamuddin area. However, we were unable to afford the rent and have since been living under the Lodhi Road flyover before moving into the night shelter."

"While the government had promised free electricity and water, my landlord still charged us, even if the bill showed zero. What is the purpose of such schemes if they do not reach us?" rued Ms. Nisha, who works as a garbage collector.

At this night shelter, located near the Delhi Golf Club, there are around 120 residents ranging from six months old to 75 years old. "There must be around 20-25 residents who have a valid voter ID and have gone to vote," said one of the residents.

Another night shelter resident, Ms. Sonia (30), who had just returned from voting, said she was unsure whether her vote would lead to a better future. "All political parties come with lots of promises, but nothing happens afterwards. For example, there were promises of free education, free books, pens, and uniforms for poor students, but my children have been unable to avail them," the mother of four said.

Sitting on one of the rows of beds, surrounded by her kids inside the tarpaulin tent of the night shelter, she elaborated, "Even for admission, the authorities are asking for a ₹500 bribe for each student. How can I afford it? None of my kids go to school."

Ms. Sonia, who works as a maid for a family in the Delhi Gate area, said the only government scheme that benefited her was the free bus ride for women.

An elderly woman, Ms. Julekha (65), who is deaf and mute, flashed her inked finger and then showed her voter ID card, carefully tucked inside a pouch. She, too, had moved into the night shelter at the onset of winter.


When asked what she would do when the night shelter gets dismantled in the summer, she pointed to the flyover where she originally lived.

Published - February 05, 2025 03:35 pm IST

# Karol Bagh records the lowest voter turnout, Mustafabad highest

Updated - February 06, 2025 09:11 am IST - New Delhi

SAMRIDHI TEWARI



Voters wait in a queue to cast their votes for the Delhi Assembly elections, at Mustafabad constituency in New Delhi on Wednesday. | Photo Credit: ANI

Mustafabad Assembly in north-east Delhi on Wednesday recorded the highest voter turnout at 69%, according to Election Commission data. It was followed by Seelampur — 68.70% — located in the same region.

In Mustafabad, several polling stations saw queues of voters throughout the day as they came out in large numbers to exercise their franchise. "For people living here [Mustafabad], a vote is a hope for change as they struggle for basic amenities. People also remember the Delhi riots [2020], when the lives of many were altered forever," said Adil Ansari, 41, who works in a private company.

In Seelampur, Satbir Singh, 64, said people voted enthusiastically as the area saw a lot of campaigns ahead of the poll. "People here are more aware of politics," he added. Sunil Sharma, 40, from the same area, said, "Seelampur is like a village. People know each other, and we come out in groups to vote."

A Flourish map

Published - February 06, 2025 01:54 am IST

THE HINDU - ENGLISH

Dated: 07.02.2025

# Erode East bypoll records a turnout of 67.97%

The Hindu Bureau
ERODE

The byelection to the Erode (East) Assembly constituency witnessed a turnout of 67.97% on Wednesday. This is lower than the 74.79% recorded during the 2023 byelection in the constituency.

Polling began at 7 a.m. at 237 stations in 53 locations, and concluded at 6 p.m.

The decline in the turnout could be attributed to the AIADMK and the BJP boycotting the byelection, as many of their functionaries refrained from voting. Though brisk polling was observed in the morning, the final hour saw a poor turnout at most polling stations in the constituency.

The counting of the votes would take place at the Government College of Engineering in Chithode on Saturday.

DECCAN CHRONICLE
Dated: 07.02.2025

# Erode East bypoll: Voter turnout dips by 6.72 per cent in 2025

ERODE, FEB. 6

Voter turnout in the byelection held for the Erode East Assembly Constituency on Feb. 5 has decreased by 6.72 per cent compared to the 2023 bypoll, according to Election officials.

In 2023, the constituency witnessed 74.69 per cent polling, where Congress candidate EVKS Elangovan was declared elected, defeating his nearest rival K S Thennarasu (AIADMK) by 66,233 votes. In 2025, the bypoll was necessitated following the death of Elangovan.

A total of 67.97 per cent of voting was recorded in Erode east Assembly bypoll, authorities said late on Wednesday. There were 46 candidates, including 44 independents, in the fray and the contest was only between the ruling DMK's VC Chandirakumar and Tamil nationalist party, Naam Tamizhar Katchi's (NTK) M K Seethalakshmi.

All the EVMs from 237 polling stations were sent to the Institute of Road and Transport Technology, Chitode where the counting of votes will be held on Feb. 8.A four-tier security has been provided in the strong room where Electronic Voting Machines (EVMs) are kept, police said. *—PTI*

THE NEW INDIAN EXPRESS

Dated: 07.02.2025

# Can EC adjudicate on AIADMK poll, asks EPS in HC plea

EXPRESS NEWS SERVICE
@ Chennai

AIADMK general secretary Edappadi K Palaniswami on Thursday asked the Election Commission of India (ECI) to show its jurisdictional powers to adjudicate on representations challenging the party's organisational polls and disputes.

Senior counsel Aryama Sundaram, appearing for Palaniswami, made the submission before a division bench of Justices R Subramanian and G Arul Murugan in the case filed for seeking to restrain the commission from doing quasi-judicial adjudication on the representations submitted by certain persons, including former MPs P Ravindranath and KC Palanisamy, who sought the ECI not to acknowledge the amendments made in the party's bylaws and the consequent election of EPS as the general secretary.



The court had temporarily restrained the ECI from proceeding with the matter.

"The prima facie issue is whether the ECI has got the jurisdiction to hear these representations. If it proceeds on and decides the matter, it will cause irreparable hardship to the party with about 2 crore primary members, given the election is nearing," he told the court. The counsel said, "If the factum of cognisance is accepted, then the fundamental issue of jurisdiction to take cognisance arises." He asked the ECI to show its jurisdictional powers to ask for a reply from AIADMK in the matter.

Aryama Sundaram also questioned the locus standi of Ravindranath in filing the petition, as he was expelled from the party in July 14, 2022, which he has not challenged legally.

However, senior counsel Jayant Bhushan, representing Ravindranath, contended he was not expelled from the party till his tenure as MP ended, and so, they cannot say he has no locus standi.

Bhushan said the petition filed by EPS is premature. "They want to shut down the ECI and not proceed with the matter. The ECI is a Constitutional body and they are empowered to decide as to who the real party is. Now, I don't know whether that kind of thing can be taken up in a suit at all when the commission is having the authority," he said, skeptical about whether a suit can be filed asking the civil court to say as to who the real party is.

Advocate R Thirumoorthy made submissions on behalf of another petitioner V Pugazhendi. The court adjourned the hearing to Friday for the ECI counsel to advance arguments.

THE NEW INDIAN EXPRESS
Dated: 07. 02. 2025

# Erode bypoll: Four-tier security for strongroom

**EXPRESS NEWS SERVICE**
@ Coimbatore

EVMs used in the bypoll in Erode East constituency have been placed in the strongroom at the Government Engineering College. District Election Officer and Erode Collector Raja Gopal Sunkara said four-tier security has been provided to the counting centre, and 183 police personnel will be on duty on a shift basis.

The room was sealed in the presence of general election observer Ajaykumar Gupta, candidates, and agents. As per election commission instructions, a total of 78 CCTV cameras have been fixed in the administrative block, and the room is monitored round the clock.

"CCTVs are monitoring the strongroom door, pathway, and the college campus. We have issued identity cards to agents, and they will be monitoring the CCTV feed," the collector said.

He has also allotted counting works to election officials for February 8, in the presence of the returning officer and Erode corporation commissioner HS Srikanth. 852 ballot units, 285 control units, and 308 VVPAT machines were used in election.

D.T.NEXT
Dated: 07.02.2025

# EPS challenges EC's powers over internal affairs

**CHENNAI:** AIADMK general secretary Edappadi K Palaniswami vehemently objected to the quasi-judicial proceedings of the Election Commission of India (ECI) and submitted before the Madras High Court that the poll panel doesn't have jurisdiction to adjudicate the internal issues of a party.

A division bench of Justice R Subramanian and Justice G Arul Murugan heard a petition preferred by Palaniswami against the quasi-judicial proceedings of ECI. The case pertains to EC's inquiry into several representations, including the one filed by former member of the Parliament OP Ravindranath, son of ousted AIADMK leader O Panneer Selvam (OPS).

Senior counsel C Aryama Sundaram appeared for Palaniswami and submitted that the ECI didn't issue any notice to his client based on representations made by petitioners except the one received on a representation made by Suriyamoorthi, claiming himself as a party member, seeking to freeze AIADMK's Two Leaves symbol.

Without sending a notice, the ECI cannot conduct the proceedings, he argued.

DAILY THANTHI
Dated: 07.02.2025

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல்

# பதிவான வாக்கு விவரத்தை முழுமையாக வெளியிடாதது ஏன்?

## நாம் தமிழர் கட்சி வேட்பாளர் கேள்வி

ஈரோடு, பிப்.7-

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் பதிவான வாக்கு விவரத்தை முழுமையாகவெளியிடாதது ஏன்? என்று நாம் தமிழர் கட்சி வேட்பாளர் சீதாலட்சுமி கேள்வி எழுப்பி உள்ளார்.

### வாக்குப்பதிவு

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் நேற்று முன்தினம் நடந்தது. வாக்குப்பதிவு மாலை 6 மணிக்கு முடிந்த பிறகு பல மணிநேரம் ஆகியும் வாக்குப்பதிவு சதவீதம் முறையாக அறிவிக்கப்படவில்லை.

பின்னர் இரவு 8 மணிக்கு மேல் தேர்தல் தொடர்பான சில அதிகாரிகளை தொடர்பு கொண்டபோது 72 சதவீதம் வாக்குகள் பதிவாகி உள்ளது. தேர்தல் ஆணைய இணையதளத்தில் பதிவேற்றும் பணி நடந்து வருகிறது. எனவே பதிவேற்றம் முடிந்த பிறகே முழுமையான அறிவிப்பு வெளியிடப்படும் என்று தெரிவித்தனர்.

### வெளியிடாதது ஏன்?

இரவு 11.10 மணிக்கு அதிகாரப்பூர்வ அறிவிப்பாக இல்லாமல் தேர்தல் ஆணைய இணையதளத்தில் பதிவு செய்யப்பட்ட வாக்கு சதவீத எண்ணிக்கை 67.97 சதவீதம் என மாவட்ட நிர்வாகம் மூலம் வெளியிடப்பட்டது. இந்தநிலையில் வாக்குப்பதிவு சதவீத விவரத்தைவெளிப்படையாக முழுமையாக வெளியிடாதது ஏன்? என நாம் தமிழர் கட்சி வேட்பாளர் சீதாலட்சுமி கேள்வி எழுப்பி உள்ளார்.

இதுகுறித்து ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அதிகாரியிடம்வேட்பாளர் சீதாலட்சுமி அளித்த மனுவில் கூறப்பட்டுள்ளதாவது:-

ஈரோடு கிழக்கு தொகுதி வாக்குப்பதிவு மாலை 6 மணிக்கு நிறைவடைந்தது. பதிவான வாக்குகள் சதவீதம் இரவு 11 மணிக்கு மேல் 67.97 சதவீதம் என தெரிவிக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து தேர்தல் நாளில் பதிவான மொத்த வாக்குகள், ஓட்டுப்போட்ட ஆண் வாக்காளர்கள், பெண் வாக்காளர்கள், 3-ம் பாலினத்தவர், தபால் வாக்குகள் உள்ளிட்டவை குறித்து பத்திரிகைகள் வாயிலாக வெளியிட எந்த விவரங்களும் வழங்கப்படாதது ஏன்?.

### மர்மம்

இது குறித்து பத்திரிகையாளர்கள் கேட்டும் வாக்கு சதவீதம் தொடர்பான விவரங்கள் வெளிப்படையாக தெரிவிக்கப்படாதது மர்மமாகவே உள்ளது. ஆள் மாறாட்டம், கள்ள ஓட்டுகள் பதிவு என பல புகார்கள் உள்ள நிலையில் பதிவான வாக்குகள் விவரத்தைவெளியிடாமல் மறைப்பது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

DAILY THANTHI

Dated: 07.02.2025

### அ.தி.மு.க. சின்னம் தொடர்பாக

# இல்லாத அதிகாரத்தை கொண்டு தேர்தல் ஆணையம் விசாரிக்க முடியாது

## ஐகோர்ட்டில் எடப்பாடி பழனிசாமி தரப்பில் வாதம்

சென்னை, பிப்.7-

இல்லாத அதிகாரத்தை எடுத்துக்கொண்டு அ.தி.மு.க., சின்னம் தொடர்பாக தேர்தல் ஆணையம் விசாரணை நடத்த முடியாது என்று சென்னை ஐகோர்ட்டில் எடப்பாடி பழனிசாமி தரப்பில் வாதிடப்பட்டது.

**சின்னம்**

அ.தி.மு.க., உள்கட்சி விவகாரம் தொடர்பான வழக்குகள் விசாரணை முடியும் வரை இரட்டை இலை சின்னத்தை அ.தி.மு.க.வுக்கு ஒதுக்கக் கூடாது என்று சூரியமூர்த்தி என்பவர் ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கை விசாரித்த ஐகோர்ட்டு, இவரது கோரிக்கையை அனைத்து தரப்பினரின் கருத்தை கேட்டு விசாரித்து தகுந்த முடிவை எடுக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட்டது. அதேபால, அ.தி.மு.க., உள்கட்சி விவகாரம் தொடர்பாக ஓ.பன்னீர்செல்வத்தின் மகனும், முன்னாள் எம்.பி.யுமான ரவீந்திரநாத், புகழேந்தி, எம்.ஜி.ராமச்சந்திரன் உள்ளிட்டோரும் தேர்தல் ஆணையத்துக்கு மனு அனுப்பி இருந்தனர்.

**தடை**

இதன் அடிப்படையில் தேர்தல் ஆணையம் நடத்திய விசாரணைக்கு தடை கேட்டு சென்னை ஐகோர்ட்டில் எடப்பாடி பழனிசாமி வழக்கு தொடர்ந்தார். அதில், நீதிமன்றத்தைப் போல விசாரணை நடத்த தேர்தல் ஆணையத்துக்கு அதிகாரம் இல்லை" என்று கூறியிருந்தார். இந்த வழக்கைவிசாரித்தஐகோர்ட்டு, தேர்தல் ஆணையத்தின் விசாரணைக்கு தடை விதித்தது. இந்த வழக்கிற்கு தேர்தல் ஆணையம் பதில் மனு தாக்கல் செய்துள்ளது. இந்த நிலையில், இந்த வழக்கு நீதிபதிகள் ஆர்.சுப்பிரமணியன், ஜி.அருள்முருகன் ஆகியோர் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது.

**அதிகாரம்**

அப்போது ரவீந்திரநாத் சார்பில் டெல்லி மூத்த வக்கீல் ஜெயந்த் பூசன், வக்கீல் பிரசாத் குமார் ஆகியோர் ஆஜராகி, "ஒரு கட்சியில் பிளவு ஏற்பட்டு, எதிர் அணி ஒன்று உள்ளது என்று தேர்தல் ஆணையத்துக்கு தெரிந்தாலே, தாமாக முன் வந்து சின்னம் தொடர்பாக விசாரணை நடத்த அதிகாரம் உள்ளது" என்று வாதிட்டனர். இதேபோல, பிற மனுதாரர்கள் தரப்பிலும் வக்கில்கள் ஆஜராகி, விசாரணை நடத்த தேர்தல் ஆணையத்துக்கு அதிகாரம் உள்ளது என்று வாதிட்டனர்.

**ரத்து**

எடப்பாடி பழனிசாமி தரப்பில் ஆஜரான மூத்த வக்கில் சி.ஆரியமா சுந்தரம், "மனுதாரரின் கோரிக்கையை பரிசீலிக்க வேண்டும் என்று ஐகோர்ட்டு உத்தரவிட்டால், சட்டத்துக்கு உட்பட்டுதான் தேர்தல் ஆணையம் விசாரிக்க முடியும். மாறாக நீதிமன்றம் போல, பலருக்கு நோட்டீஸ் அனுப்பி விசாரிக்க முடியாது. அதுவும், கட்சிக்கு சம்பந்தமே இல்லாத நபர்களுக்கு தேர்தல் ஆணையம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது. சின்னம் தொடர்பான விவகாரத்தில், இல்லாத அதிகாரத்தை எடுத்துக்கொண்டு தேர்தல் ஆணையம் விசாரணை நடத்த முடியாது. அதுதொடர்பாக எடப்பாடி பழனிசாமிக்கு அனுப்பிய நோட்டீசை ரத்து செய்ய வேண்டும்" என்று வாதிட்டார்.

**இன்று விசாரணை**

இதையடுத்து, இந்த வழக்கை இன்று (வெள்ளிக்கிழமை) விசாரிப்பதாக கூறிய நீதிபதிகள், அப்போது தேர்தல் ஆணையம் தரப்பு வக்கீல் வாதம் செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டனர்.

DINAMALAR
Dated: 07.02.2025

# தேர்தல் கமிஷன் விசாரிக்க முடியாது: பழனிசாமி வாதம்

சென்னை, பிப். 7–

'அ.தி.மு.க., பொதுச் செயலராக பழனிசாமி தேர்ந்தெடுக்கப்பட்டதை அங்கீகரிக்கக் கூடாது; கட்சி விதிகளில் திருத்தம் செய்தது செல்லாது' என, தேர்தல் கமிஷனிடம் அ.தி.மு.க., முன்னாள் எம்.பி.,க்கள் கே.சி. பழனிசாமி, ஓ.பி.ரவீந்திரநாத், வா.புகழேந்தி, வழக்கறிஞர் ராம்குமார் ஆதித்தன், சூரியமூர்த்தி உள்ளிட்டோர் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு அளித்திருந்தனர்.

இதற்கு தடை கேட்டு, உயர் நீதிமன்றத்தில் பழனிசாமி மனுக்கள் தாக்கல் செய்தார். இந்த மனுக்களை விசாரித்த உயர் நீதிமன்றம், உள்கட்சி விவகாரம் தொடர்பாக, தேர்தல் கமிஷன் விசாரிக்க இடைக்கால தடை விதித்தது.

இந்த வழக்குகள், நீதிபதிகள் ஆர்.சுப்பிரமணியன், ஜி.அருள்முருகன் அடங்கிய அமர்வு முன், நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. முன்னாள் எம்.பி., ரவீந்திரநாத், புகழேந்தி ஆகியோர் தரப்பில் தடையை நீக்கக் கோரி, மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

அப்போது, ரவீந்திரநாத் மற்றும் புகழேந்தி தரப்பில், 'தனிப்பட்ட அதிகாரம் கொண்ட தேர்தல் கமிஷன் விசாரணைக்கு தடை கோர முடியாது.

'மனுக்கள் மீது, தேர்தல் கமிஷன் எந்த உத்தரவும் பிறப்பிக்காத நிலையில், முன்கூட்டியே இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது' என, வாதிடப்பட்டது.

பழனிசாமி தரப்பில், 'உயர் நீதிமன்ற உத்தரவு அடிப்படையில், தேர்தல் கமிஷன் அளித்த நோட்டீசுக்கு பதில் அளிக்கப்பட்டது. மற்றவர்கள் மனுக்களை விசாரிக்க ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டது.

'உள்கட்சி விவகாரங்கள் தொடர்பாக, உரிமையியல் வழக்குகள் உள்ள நிலையில், இல்லாத நீதிமன்ற அதிகாரத்தை எடுத்துக் கொண்டு தேர்தல் கமிஷன் விசாரணை நடத்த முடியாது. அதனால், மற்றவர்கள் அளித்த மனு மீது விசாரணை நடத்த எதிர்ப்பு தெரிவித்து வழக்கு தொடரப்பட்டுள்ளது' என, வாதிடப்பட்டது.

இதையடுத்து, தேர்தல் கமிஷன் தரப்பு வாதத்துக்காக, விசாரணை இன்று தள்ளிவைக்கப்பட்டுள்ளது.

DINAKARAN

Dated: 07.02.2025

## இல்லாத அதிகாரத்தை எடுத்துக் கொண்டு

# உள்கட்சி விவகாரம் தொடர்பாக தேர்தல் ஆணையம் விசாரிக்க முடியாது

**ஐகோர்ட்டில் இபிஎஸ் தரப்பு வாதம்**

சென்னை, பிப். 7: அதிமுக பொதுச்செயலாளராக எடப்பாடி பழனிசாமியை தேர்ந்தெடுத்தது செல்லாது என்றும், அதிமுக பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை ஏற்கக் கூடாது என்றும் உத்தரவிடக்கோரி ரவீந்திரநாத், புகழேந்தி உள்ளிட்டோர் அளித்த விண்ணப்பங்களை விசாரிக்க தேர்தல் ஆணையத்துக்கு தடை விதிக்கக்கோரி அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கு விசாரணைக்கு வந்த போது, உரிமைகள் வழக்குகள் முடிவுக்கு வரும் வரை அதிமுகவுக்கு இரட்டை இலை சின்னம் ஒதுக்க கூடாது என்று சூரியமூர்த்தி என்பவர் மனு தாக்கல் செய்தார். அந்த மனுவை விசாரித்த உயர் நீதிமன்றம், அனைத்து தரப்பினரின் விளக்கத்தைக் கேட்டு சூரியமூர்த்தியின் விண்ணப்பத்தை பரிசீலிக்க வேண்டும் என்று உத்தரவிட்டது. அதன், அடிப்படையில் விசாரணை மேற்கொள்வதாக தேர்தல் ஆணையம் தரப்பில் அப்போது தெரிவிக்கப்பட்டது. இதை தொடர்ந்து உச்ச நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கின் அறிவுறுத்தலின் அடிப்படையில் தேர்தல் ஆணைய விசாரணைக்கு தடை விதித்து உயர் நீதி மன்றம் உத்தரவிட்டது.

இந்த வழக்கு நீதிபதிகள் ஆர்.சுப்பிரமணியன் மற்றும் ஜி.அருள்முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, பன்னீர்செல்வத்தின் மகனும் முன்னாள் எம்பியுமான ரவீந்திரநாத் மற்றும் புகழேந்தி தரப்பில் தடையை நீக்க கோரி மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த மனுக்கள் மீதான விசாரணையின் போது, ரவீந்திரநாத் மற்றும் புகழேந்தி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர்கள், உயர் நீதி மன்ற உத்தரவுக்கு முன்பு தேர்தல் ஆணையத்தில் அளித்த மனுக்களுக்கு பதிலளிக்கவே தேர்தல் ஆணையம் உத்தரவிட்டிருந்தது. தனிப்பட்ட அதிகாரம் கொண்ட தேர்தல் ஆணையத்தின் விசாரணைக்கு தடை கோர முடியாது. மனுக்கள் மீது தேர்தல் ஆணையம் எந்த உத்தரவும் பிறப்பிக்காத நிலையில் முன்கூட்டியே இந்த வழக்கு தொடரப்பட்டுள்ளன என்று வாதிட்டனர்.

அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், உயர் நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் தேர்தல் ஆணையம் அளித்த நோட்டீசுக்கு பதிலளிக்கப்பட்டது. மற்றவர்கள் மனுக்களை விசாரிக்க ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டது. உள்கட்சி விவகாரங்கள் தொடர்பாக உரிமையியல் வழக்குகள் உள்ள நிலையில், இல்லாத அதிகாரத்தை எடுத்துக் கொண்டு தேர்தல் ஆணையம் விசாரணை நடத்த முடியாது. அதனால் மற்றவர்கள் அளித்த மனு மீது விசாரணை நடத்த எதிர்ப்பு தெரிவித்து வழக்கு தொடரப்பட்டுள்ளது என்று வாதிட்டார்.

இதைத் தொடர்ந்து, தேர்தல் ஆணையம் தரப்பின் வாதத்துக்காக வழக்கு விசாரணை இன்று தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

DINAKARAN

Dated: 07.02.2025

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல்

# நாளை வாக்கு எண்ணிக்கை

## பலத்த பாதுகாப்பு



ஈரோடு, சித்தோடு அரசு பொறியியல் கல்லூரி வாக்கு எண்ணும் மையத்தில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள அறைக்கு துப்பாக்கிய ஏந்திய துணை ராணுவத்தினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

ஈரோடு,பிப்.7: ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் பதிவான வாக்குகள் நாளை எண்ணப்படுகின்றன.

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி எம்எல்ஏவாக இருந்த ஈவிகேஎஸ்.இளங்கோவன் கடந்த டிசம்பர் 14ம் தேதி மரணமடைந்ததையடுத்து, இத்தொகுதிக்கான இடைத்தேர்தலை கடந்த ஜனவரி 7ம் தேதி தேர்தல் ஆணையம் அறிவித்தது. இந்த தேர்தலில் திமுக வேட்பாளர் வி.சி.சந்திரகுமார், நாதக வேட்பாளர் சீதாலட்சுமி மற்றும் சுயேட்சை வேட்பாளர்கள் உள்ளிட்ட 46 பேர் போட்டியிட்டனர்.

இந்த தேர்தலில் ஆண் வாக்காளர்கள் 1 லட்சத்து 10 ஆயிரத்து 128 பேரும், பெண் வாக்காளர்கள் 1 லட்சத்து 17 ஆயிரத்து 381பேரும், மூன்றாம் பாலினத்தவர்கள் 37 பேரும் என மொத்தம் 2 லட்சத்து 27 ஆயிரத்து 546 வாக்களிக்க 237 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டிருந்தன. வாக்குப்பதிவு நேற்று முன்தினம் காலை 7 மணிக்கு தொடங்கி மாலை 6 மணி வரை நடைபெற்றது. இதில் 67.97 சதவீதம் வாக்குகள் பதிவானது. வாக்குப்பதிவு நிறைவடைந்ததும், வாக்குப் பெட்டிகள் அரசியல் கட்சியின் வாக்குச்சாவடி முகவர்களின் முன்னிலையில் சீல் வைக்கப்பட்டன. 24 மண்டல அதிகாரிகள் ஒவ்வொரு வாக்குச்சாவடி மையங்களுக்கு சென்று, வாக்குச்சாவடி முதன்மை அலுவலர்களிடம் இருந்து வாக்குப்பதிவு இயந்திரங்களை பெற்றனர்.

பின்னர் ஜிபிஎஸ் கருவி பொருத்தப்பட்ட வாகனங்களில் துப்பாக்கி ஏந்திய துணை ராணுவம், போலீஸ் பாதுகாப்புடன் வாக்கு எண்ணிக்கை மையமான சித்தோட்டில் உள்ள ஈரோடு அரசு பொறியியல் கல்லூரிக்கு வாக்குப்பதிவு இயந்திரங்கள் அனுப்பி வைக்கப்பட்டன. இதில் கடைசி வாகனம் நேற்று அதிகாலை 4.30 மணியளவில் வாக்கு எண்ணிக்கை மையத்திற்கு வந்து சேர்ந்தது.

அதைத்தொடர்ந்து, அங்கு உள்ள 'ஸ்டிராங் ரூமில்' வாக்குச்சாவடி வாரியாக இயந்திரங்கள் அடுக்கி வைக்கப்பட்டு, தேர்தல் பொதுபார்வையாளர் அஜய்குமார் குப்தா, மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலரும், கலெக்டருமான ராஜகோபால் சுன்கரா, ஈரோடு கிழக்கு தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலரும், மாநகராட்சி ஆணையருமான ஸ்ரீகாந்த், ஈரோடு எஸ்பி ஜவகர் ஆகியோர் நேரில் பார்வையிட்டு, வேட்பாளர்கள் மற்றும் முகவர்கள் முன்னிலையில் சீல் வைக்கப்பட்டது.

தொடர்ந்து வாக்கு எண்ணிக்கை மையத்தில், 4 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டு தீவிர கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. முதல் அடுக்கில் ஸ்ட்ராங் ரூம் பகுதியை சுற்றியும் மத்திய தொழிற்பாதுகாப்பு படையினரும், இரண்டாம் அடுக்கில் தமிழ்நாடு பட்டாலியன் போலீசார், மூன்றாம் அடுக்கில் ஆயுதப்படை போலீசார், நான்காம் அடுக்கில் லோக்கல் போலீசாரும் 24 மணி நேரமும் 3 ஷிப்ட் முறையில் 400க்கும் மேற்பட்டோர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுகின்றனர். தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி 78 சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டு, கட்டுப்பாட்டு அறையில் இருந்து 24 மணி நேரமும் கண்காணிக்கப்பட்டு வருகிறது. வாக்கு எண்ணிக்கை நாளை (8ம் தேதி) காலை 8 மணிக்கு நடைபெற உள்ளது. மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் பதிவான வாக்குகள் 14 மேஜைகளில் எண்ணப்பட உள்ளன. இப்பணியில் மொத்தம் 51 பேர் ஈடுபட உள்ளனர். நாளையே இடைத்தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்ட உள்ளது.

DINAKARAN

Dated: 07.02.2025

தேர்தல் ஆணையத்தால்

# உட்கட்சி தகராறுகளை தீர்த்து வைக்க முடியாது

## டெல்லி உயர் நீதிமன்றம் உத்தரவு

புதுடெல்லி, பிப். 7: பகுஜன் முக்தி கட்சியின் தேசிய தலைவர் பர்வேந்திர பிரதாப் சிங், டெல்லி உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில், "கட்சியின் தேசிய செயற்குழு கூட்டத்தை கூட்ட வேண்டும். கட்சியின் சட்டவிதிகள்படி புதிய நிர்வாகிகளை தேர்வு செய்ய தேர்தல் ஆணையத்திற்கு உத்தரவிட வேண்டும்" என வலியுறுத்தி இருந்தார்.

இந்த மனுவை தள்ளுபடி செய்த டெல்லி உயர் நீதிமன்ற நீதிபதி ஜோதி சிங் பிறப்பித்த உத்தரவில், " அரசியல் கட்சி பதிவு செய்யப்பட்ட பிறகு, அதன் சட்டவிதிகளை பின்பற்றுகிறதா, உள்கட்சி தேர்தலை நடத்துகிறதா என்பதை கண்காணிக்க தேர்தல் ஆணையத்திற்கு எந்த அதிகாரமும் வழங்கப்படவில்லை. உட்கட்சி தகராறுகளை தேர்தல் ஆணையத்தால் திர்க்க முடியாது. பிரச்னைகள் இருந்தால், நீதிமன்றம் தீர்த்துக் கொள்ளலாம்" என கூறி உள்ளார்.

DINAMANI

Dated: 07.02.2025

# ஈரோடு கிழக்கு இடைத் தேர்தலை ரத்து செய்யக் கோரிய மனு தள்ளுபடி

சென்னை,பிப்.6: ஈரோடு கிழக்கு சட்டப்பேரவைத் தொகுதி இடைத் தேர்தலை ரத்து செய்யக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலை அதிமுக, பாஜக,தேமுதிக,த.வெ.க உள்ளிட்ட கட்சிகள் புறக்கணித்த நிலையில், திமுக வேட்பாளர் வி.சி.சந்திரகுமார், நாம் தமிழர் கட்சி சார்பில் சீதாலட்சுமி உள்பட 46 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். இந்தத் தேர்தல் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

இந்நிலையில், இந்தத் தேர்தலை ரத்து செய்யக் கோரி, சுயேச்சை வேட்பாளர் அக்னி ஆழ்வார் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கு நீதிபதிகள் ஆர்.சுப்பிரமணியன், அருள்முருகன் ஆகியோர் முன் விசாரணைக்கு வந்தது.

அப்போது, ஈரோடு கிழக்கு தேர்தலில் வேட்பாளராக அறிவிக்கப்பட்ட பத்மாவதி, பாண்டியன் ஆகிய வேட்பாளர்கள் வேட்புமனுக்களில் பல தகவல்களை மறைத்து முறைகேடாக போட்டியிட்டுள்ளனர். இது குறித்து தேர்தல் ஆணையத்துக்கு மனு அளித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எனவே, இந்த இடைத்தேர்தலை ரத்து செய்ய உத்தரவிட வேண்டும் என மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள், வேட்பு மனுவில் தகவல்கள் மறைக்கப்பட்டது குறித்து மனுதாரர் அளித்த புகார் மனு மீது தேர்தல் ஆணையம் பரிசீலிக்க அறிவுறுத்தினர். மேலும், தேர்தல் முடிந்துவிட்டதால் இடைத் தேர்தலை ரத்து செய்ய உத்தரவிட முடியாது எனக் கூறி மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிhPனர்.

DINAMANI

Dated: 07.02.2025

# அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படாத ஈரோடு கிழக்கு வாக்குப் பதிவு விவரம்

ஈரோடு, பிப். 6: ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் 67.97 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளதாக தேர்தல் ஆணைய செயலியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படாததால் வாக்குப் பதிவு விவரம் தெரியாமல் வேட்பாளர்கள் குழப்பம் அடைந்துள்ளனர்.

ஈரோடு கிழக்கு தொகுதி எம்எல்ஏவாக இருந்த ஈவிகேஎஸ் இளங்கோவன் மறைவைத் தொடர்ந்து இத்தொகுதிக்கு இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டது. இத்தேர்தலை அதிமுக, பாஜக, தேமுதிக, தவெக உள்ளிட்ட கட்சிகள் புறக்கணித்த நிலையில் திமுக சார்பில் வி.சி.சந்திரகுமார், நாம் தமிழர் கட்சி சார்பில் மா.கி.சீதாலட்சுமி உள்பட 46 வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் வாக்குப் பதிவு புதன்கிழமை நடைபெற்றது. இத்தேர்தலில் 2 லட்சத்து 27 ஆயிரத்து 546 வாக்காளர்கள் வாக்களிக்க வசதியாக 53 இடங்களில் 237 வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டிருந்தன.

இடைத்தேர்தல் வாக்குப் பதிவு குறித்து தேர்தல் ஆணைய செயலியில் பதிவான தகவல்கள் மட்டும் மாவட்ட தேர்தல் அலுவலரால் வழங்கப்பட்டது. அதன்படி காலை 9 மணிக்கு 10.95 சதவீதம், 11 மணிக்கு 26.03 சதவீதம், நண்பகல் 1 மணிக்கு 42.41 சதவீதம், பிற்பகல் 3 மணிக்கு 53.63 சதவீதம், மாலை 5 மணிக்கு 64.02 சதவீதம், வாக்குப் பதிவு நிறைவில் 67.97 சதவீத வாக்குகளும் பதிவாகி உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தொகுதியில் பதிவான மொத்த வாக்குகள், ஆண், பெண் மற்றும் மூன்றாம் பாலினத்தவரின் வாக்குகள், வாக்குப் பதிவு சதவீதம் குறித்து எந்த தகவலும் தேர்தல் நடத்தும் அலுவலரால் அதிகாரபூர்வமாக வியாழக்கிழமை இரவு வரை வழங்கப்படவில்லை.

தேர்தல் முடிந்து 24 மணி நேரத்துக்கு மேலாகியும் வாக்குப் பதிவு விவரம் அதிகாரபூர்வமாக வெளியிடாதது சந்தேகத்தை ஏற்படுத்துவதாக நாதக வேட்பாளர் சீதாலட்சுமி ஈரோடு கிழக்கு தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் ஆகியோருக்கு மனு அனுப்பி உள்ளார்.